# விடை தேடும் வினாக்கள்



## வில்லியும் பாரதியும்

www.saivamonline.com

முனைவர். இரா. செல்வக்கணபதி

# Contact Details



www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI

# 9. வில்லியும் பாரதியும்

பாரதியைத் தனித்து ஆராயாமல், வில்லியோடு ஒப்புநோக்கி ஆராய்வது பல புதிய வடிவங்களையும் பரிணாமங்களையும் நமக்கு நல்கும். பாரதியின் விரிந்த கவிதைப் பரப்பை வில்லியோடு ஒப்பிடவேண்டியிருத்தலின், ''பாஞ்சாலி சபத'' அளவில் பாரதியைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். மகாபாரதம் வடித்த வில்லியைப் பாரதியோடு இணைத்துப் பார்ப்பதால் பாரதக் கதையின் விரிந்த பரப்பை ஆராய்வதைவிடுத்து ஒரு பகுதியைச் ''சூதுபோர்ச்சருக்கத்தை'' மட்டும் ஒப்பு நோக்குக்காக எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, வில்லியும் பாரதியும் என்ற ஒப்புநோக்கு, பொதுமை அடிப்படையில், இருவேறுமாறுபட்ட காலத்தில் வாழ்ந்த இருபெரும் மகா கவிஞர்களை முழுவதுமாக ஆராய்வதாக அமையாமல், இவர்கள் படைப்பின் ஒவ்வோர் பகுதி பற்றிய ஒப்பாய்வாகவே அமையமுடியும். எனவே, பாரதியின் பாஞ்சாலி சபதத்தை வில்லிபாரதத்தின் ''சூதுபோர்ச்சருக்கத்தோடு'' ஒப்பிட்டுப் பார்க்கும் முயற்சி இங்கே அரும்புகின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றைப் பலவாறாகப்பகுத்து அறிஞர்கள் ஆராய்கின்றனர். பொதுவாக ஒரு புதிய நோக்கில்

www.saivamonline.com

பார்த்தால் தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிப் போக்கை இவற்றின் மாறுதல்களை நான்காகப் பகுக்கலாம். கருத்து முதன்மை பெற்ற காலம் முதலாவது. சங்க நூல்களை இவ்வகையில் அடக்கலாம். இரண்டாவது இசையே முதன்மை பெற்ற காலம். தேவார திவ்வியப்பிரபந்த எழுச்சி நோக்கியது இப்பகுப்பு. யாப்பே முதன்மை பெற்ற காலம் மூன்றாவது. இதனைச் சிற்றிலக்கியக்காலம் எனலாம். ஒரே அமைப்பில் சிறு சிறு மாற்றங்களே கிளைத்த உலாக்களும் பிள்ளைத் தமிழ்களும் கலம்பகங்களும் பல நூற்றாண்டுக்காலம் புலவர்களை ஆட்கொண்டிருந்தன. தற்காலம், இம்மூன்றுக்கும் மேலாக உணர்ச்சியே முதன்மை பெற்றுத் திகழும் காலம். காட்டாற்று வெள்ளம்போல் கரை புரண்டு ஓடும் இவ்வுணர்ச்சிப் போக்கிற்கு அடியிட்டுத் தந்த மிப் பெருங்கவிஞராகப் பாரதியைத் தரிசிக்கிறோம். இருபதாம் நூற்றாண்டுக் கவிதையைப் பொறுத்த வரையில் பாரதி நூற்றாண்டே. இதனைப் பாரதியுகம் என்றே கூட

---

**வில்லியும் பாரதியும் என்ற ஒப்புநோக்கு, பொதுமை அடிப்படையில், இரு வேறுமாறுபட்ட காலத்தில் வாழ்ந்த இருபெரும் கவிஞர்களை முழுவதுமாக ஆராய்வதாக அமையாமல், இவர்கள் படைப்பின் ஒவ்வோர் பகுதி பற்றிய ஒப்பாய்வாகவே அமைய முடியும்.**

---

அழைக்கலாம். பாரதி மறைவுக்குப் பிறகு ஏறத்தாழ எண்பது ஆண்டுக் காலத்தில் பாரதியின் தாக்கத்தால் பாதிக்கப்படாத கவிஞர்களே இல்லை எனலாம். பாரதியின் பாஞ்சாலி சபதம் ஒரு காவியம் மட்டுமில்லை. அது ஒரு கட்டவிழ்ந்த உணர்ச்சிப் பேராறு. பாரதியைக் காலகாலத்திற்கு நினைவு கூர வைக்கும் அவரது இலக்கிய வைப்பு நிதி. கவிஞனின் பல்வேறு உள்ளக் கிடக்கைகளைச் சேமித்து வைத்திருக்கும் ஒரு கருத்துச் சுரங்கம். சுருங்கச்சொன்னால் பாரதியின் முழுமையான வாழ்வு பாஞ்சாலி சபதத்தையே சார்ந்ததாகும். இது பல நூற்றாண்டுகளுக்குப் பின்னே நினைவு கூர்ந்து பார்க்கப் பட வேண்டியது.



www.saivamonline.com

பாரதியின் வெற்றி அவரது கவிதைகளின் எளிமையில் நிற்பது. சந்தம் அக்கவிதைகளின் உயிர்த்துடிப்பு. உணர்ச்சிகளைக் கொட்டுவது கவிஞருக்கு வாடிக்கை. பல இடங்களில் உரைநடைக்கும் பாரதியின் கவிதைகளுக்கும் இடையே உள்ள இடைவெளி மயிரிழை போன்றது. பாரதிதாசனில் இவ்விடைவெளி சற்றுப்பெரிது. எல்லாரும் கவிதையை இரசிக்கக் கவிதையை எளிமைப் படுத்துவது தேவைதான். அதுவே அளவு கடந்து போய்விட்டால், ஒரு சமுதாயத்திற்கே இந்த எளிமை மட்டுமே புரியும் என்ற நிலை உருவாகிவிட்டால், பண்டை இலக்கியங்களின் கதி என்னாவது? எனவே, விரைவாகச் செய்யப்படும் மாற்றங்கள் குறித்தும் நாம் ஆராயக் கடமைப் பட்டிருக்கிறோம். பாரதியுகத்தில் பாதிப்பால், அதன் எளிமையால் தமிழ் பாமரர் கைக்கும் மாறியது உண்மைதான். ஆனாலும்,

---

> **தற்காலம், இம்மூன்றுக்கும் மேலாக உணர்ச்சியே முதன்மை பெற்றுத் திகழும் காலம். காட்டாற்று வெள்ளம்போல் கரை புரண்டு ஓடும் இவ்வுணர்ச்சிப் போக்கிற்கு அடியிட்டுத் தந்த மிகப் பெருங்கவிஞராகப் பாரதியைத் தரிசிக்கின்றோம். இருபதாம் நூற்றாண்டுக் கவிதையைப் பொறுத்த வரையில் பாரதி நூற்றாண்டே. இதனைப் பாரதியுகம் என்றே கூட அழைக்கலாம்.**

---

கடினநடையில் அமைந்த, கருத்துவளமிக்க நமது தொன்மைக் கவிதைகளை அணுக முடியாத பாதிப்பையும் பரவலாக மக்கள் மத்தியிலே இது உண்டாக்கியிருப்பதை மறுக்க இயலாது. பலருக்கு இது கசக்கும். உண்மைகள் பெரும்பாலும் இப்படிக் கசப்பாகவே அமைகின்றன. உணர்ச்சிகளைக்கடந்து நடுநிலையோடு நாம் ஆராயும் புதிய யுகம் வரப்போகிறது. அப்போது நமது இலக்கியங்களைப் பற்றிய பல சிந்தனைகள் மாற்றமடையவே போகின்றன.

தனிப்பாடல்களில் கவிஞர்கள்பெறும் வெற்றி முழுமையானதல்ல. இவற்றுள் சில எதிர்பாராது வெற்றி பெற்று



www.saivamonline.com

நிலைத்துவிடுவதும் உண்டு. நீண்ட தொடர் நிலைச் செய்யுட்களிலேயே கவிஞர்களின் முழுமையைக் காணமுடியும். பாரதியின் பாஞ்சாலி சபதம் காப்பிய யுத்திகளோடு கூடிய ஒரு தனிநூல். கண்ணன் பாடல்கள் காப்பியமாகா. அவை ஒரு கவிதைத் தொகுதி. குயில்பாட்டு, ஓகோ என்று புகழப்படுவது உண்மை. தெளிவான உள்ளீட்டை இன்னது என விளங்கிக் கொள்ள இயலாத ஓர் இலக்கியப் புதிரே அது. ஆனாலும் அதன் இலக்கியத்தரம் சிறப்பானது. கவிதை உலகில் பாஞ்சாலி சபதம் பதித்த சுவடுகள் வன்மையானவை. பாரதி காலத்தில் கருத்துக்களைக் கூற அவர் கையாண்ட கவிதையுத்தி மகத்தான வரவேற்பைப்பெற்றது. தமிழகமே இக்கவிதைகளில் கட்டுண்டு நின்றது. பாரதியைப்போல் கருத்து வளமும் மனோவேகமும் தேசப்பற்றும் மிக்கபலர் அக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். இவர்களும் தங்கள்

---

**பாரதியின் பாஞ்சாலி சபதம் ஒரு காவியம் மட்டுமல்ல. அது ஒரு கட்டவிழ்ந்த உணர்ச்சிப் பேராறு. பாரதியைக் காலகாலத்திற்கு நினைவு கூர வைக்கும் அவரது இலக்கிய வைப்பு நிதி. கவிஞனின் பல்வேறு உள்ளக் கிடக்கைகளைச் சேமித்து வைத்திருக்கும் ஒரு கருத்துச் சுரங்கம். சுருங்கச்சொன்னால் பாரதியின் முழுமையான வாழ்வு பாஞ்சாலி சபதத்தையே சார்ந்ததாகும்.**

---

கருத்துக்களுக்கு இலக்கியவடிவம் தர விரைந்தனர். பாரதி கவிதைத்துறையில் பெற்றிருந்த செல்வாக்கு, இவர்களை அத்துறையில் அடியிடத் தடையாயிற்று. புதுமைப்பித்தன் பாரதி வெற்றிபெறாத புதுத்துறையாகச் சிறுகதை வடிவங்களை உருவாக்கி மகத்தான வெற்றி கண்டார். கல்கியின் தேசபக்தியும் ஆவேசங்களும்நாவல்களான வடிவங்கொண்டன. திரு.வி.க.வின் எண்ண ஒட்பங்கள் துள்ளுநடையில் கட்டுரைக் கோலங்களாயின. பாரதியின் கவிதை ஆட்சி அதன் வலிமை வேறுபல புதிய இலக்கியயுத்திகள் தோன்ற இவ்விருபதாம் நூற்றாண்டில் வழிகோலிற்று. இவ்வகையில் கவிதையும் பாரதியும் பிரித்தறிய இயலாத பிணைப்புக்குள் இணைந்தனர்.



www.saivamonline.com

கவிதைகளுக்குத் தலைப்புகள் எதுவாக இருந்தாலும் பாரதி கவிதைகளின் உள்ளோட்டங்கள் சில அடிப்படைகளையே சார்ந்து அமைந்தன. நாட்டுப்பற்று தமிழ் எழுச்சி பெண் விடுதலை இறைநலம் பேணுதல் என்பன குறிக்கத்தக்கன. இவை அனைத்தையும் பொதிந்து நிற்கும் அரிய படைப்பு பாஞ்சாலி சபதம்.

கவிஞனின் வெற்றி அவன் பாடுபொருளைத் தேர்ந்து எடுத்த அளவிலேயே அமைந்துவிடுகிறது என்பர். பாஞ்சாலி சபதத்தை-பாரதக்கதையைப் பாரதி தேர்ந்தெடுத்தமை, ஏதோ ஓர் அடிப்படை உடையதாகவே இருக்க வேண்டும். இந்த அடிப்படையைக் காணும் முயற்சியிலேயே பல அரிய உண்மைகள் வெளிப்படுதல்கூடும். பாரதி போற்றி வியந்த கவிஞர்கள் பலர். வள்ளுவனையும், இளங்கோவையும் கம்பனையும் பலவாறு

---

**பாரதியின் வெற்றி அவரது கவிதைகளின் எளிமையில் நிற்பது. சந்தம் அக்கவிதைகளின் உயிர்த்துடிப்பு. உணர்ச்சிகளைக் கொட்டுவது கவிஞருக்கு வாடிக்கை. பல இடங்களில் உரைநடைக்கும் பாரதியின் கவிதைகளுக்கும் இடையே உள்ள இடைவெளி மயிரிழை போன்றது. பாரதிதாசனில் இவ்விடைவெளி சற்றுப்பெரிது.**

---

போற்றிப் புகழும் பாரதி, வில்லியை விரித்துப் பேசவில்லை. இருந்தும், பாரதக்கதை பாரதியின் கவிதைப் பொருளாக அமைந்தது எதனால் என்று நமது சிந்தனை நீள்கிறது.

''போற்றித்தாய் என்று தாளங்கள் கொட்டடா போற்றித்தாய் என்று பொற்குழல் ஊதடா'' என்று பாராட்டிப் பெண்மைக்குச் சிறப்புச் சேர்த்தவர் அமரகவி. ''அன்னமூட்டிய தெய்வ மணிக்கையின் ஆணைகிடைத்திடில் அனலையும் விழுங்குவோம்'' என்று கிளர்ந்தெழுந்தன அவர் பாடல்கள். ''பாதகம் செய்வாரைக் கண்டால் நீ பயங்கொள்ளலாகாது பாப்பா. மோதி மிதித்துவிடு



www.saivamonline.com

பாப்பா. அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா'' என்று பாப்பாவுக்கே வீரமூட்டிப்பெண்மைக்குப் பெருமை சேர்த்தது அவரதுகவிதைகள். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்க நினைத்தவர்களை விந்தை மனிதர் என எள்ளி நகையாடினர் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என ஆவேசம் பொங்கி எழுந்தது பாரதிக்கு. இந்தப் பாரதியின் பெண்விடுதலை நோக்கிற்குப் பாஞ்சாலி பாரதியின் விடுதலைபெற்ற புதுமைப் பெண்ணானாள். எட்டும் அறிவியல் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்று எழுந்து நின்று ஆர்ப்பரித்தாள்; மூலக்கதையில் இருந்த சூதுபோர்ச் சருக்கம் என்ற பழம்பெயரை வீசி எறிந்து விட்டுப் பெண்ணுக்குப் பெருமைதர பாஞ்சாலி பெயரால் நூல்வடிக்கிறார் அமரகவி. கண்ணகி கால்

---

**பாரதியுகத்தில் பாதிப்பால் அதன் எளிமையால் தமிழ் பாமரர் கைக்கும் மாறியது உண்மைதான். ஆனாலும், கடினநடையில் அமைந்த கருத்துவளமிக்க நமது தொன்மைக் கவிதைகளை அணுக முடியாத பாதிப்பையும் பரவலாக மக்கள் மத்தியிலே இது உண்டாக்கியிருப்பதை மறுக்க இயலாது. பலருக்கு இது கசக்கும். உண்மைகள் பெரும்பாலும் இப்படிக் கசப்பாகவே அமைகின்றன.**

---

சிலம்பால் விரிந்தகதை போலவும், மணிமேகலைத் துறவால் அமைந்த கதை போலவும் பாண்டவர் கதை பெண்மைக்குச் சிறப்புச்செய்யும் நோக்கில் பாஞ்சாலி சபதமாயிற்று.

இராமகாதையும், பாரதமும் இந்திய நாட்டின் தொன்மைக் காப்பியங்கள். தமிழ் இலக்கியங்களில், இவ்விரண்டு கதைகளும், பல்வேறு இடங்களில், ஏதேனும் ஒரு நோக்கில் எடுத்தாளப்படுகின்றன. தமிழில் கம்பனுக்கு முன்னே நிலவிய இராமகாதைகள் பலவும் கம்பனது ஒளியில் கரைந்து போய்விட்டதைப் போல் தமிழில் வில்லிக்கு முன்னே தோன்றிய



www.saivamonline.com

பல பாரதம் பற்றிய நூல்கள் வில்லிக்குள் மறைந்து போயின. பாரதக் கதையைத் தெள்ளுதமிழில் சந்தத்தால் வடித்த 16 ஆம் நூற்றாண்டின் பெருங்காப்பியம் வில்லிபாரதம். வில்லி வடித்த பாரதம் கதையளவில் இராமகாதையைவிடப் பெரியது என்றாலும் ஏறத்தாழ 4000 பாடல்களுக்குள்ளாகக் கதையைச் செறிவோடு பாடுகின்றார் வில்லி.

கம்பரின் இராமாயணம் பெற்ற அளவுக்கு வரவேற்பை வில்லியின் பாரதம் தமிழகத்தில் பெறவில்லை என்பது உண்மைதான். காரணம், வில்லியின் கவிச்சுவை குறைவால் அல்ல. தமிழ் மண்ணின் மரபுகளோடு, பொருந்தி வராத கதை அமைப்பால் நேர்ந்த விளைவு இது. காப்பியம் என்ற அளவில் வில்லி பாரதம்தமிழுக்கு ஓர் அரிய வைப்பேயாகும். வில்லி தம் நூலைத் திருமாலின் இனிய புகழ் இடைஇடையே வருதல் நோக்கித் தாம் பாடியதாகக் குறிக்கிறார்.

---

> **"செந்தமிழ்த் தேவியே; பாரதியார் எதிர்பார்த்த வரகவிகளும், பிரபுக்களும் தோன்றியிருந்தால் அவர்களுக்கு மெய்ஞ்ஞானம் புகட்டி, அவர்கள் கடமையைக் கற்பி; இன்னும் அவர்கள் தோன்றியிருக்காவிட்டால் காலதாமதமின்றித் தோற்றுவிப்பாயாக"**
>
> **"எளிய பதங்கள் எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும்மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று தற் காலத்திலே செய்து தருவோன் நம் தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்.**

---

"மன்னு மாதவன் சரிதமும் இடைஇடை வழங்கும் என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புதற்கு இசைந்தேன்" என்பன வில்லியின் வரிகள். பாரதியும், தாம் பாஞ்சாலி சபதம் இயற்றியதற்குக் காரணம் கூறுகின்றார். அவர் கூறும் காரணம் புதுமையானது. 1912 இல், பாரதி வாழ்ந்த காலத்திலேயே



www.saivamonline.com

பாஞ்சாலி சபதத்தின் முதற்பாகம் வெளியிடப் பெற்றது. இது சூதாட்டச்சருக்கம், அழைப்புச் சருக்கம் என இரண்டு உட்பகுதிகளையும் 204 பாடல்களையும் கொண்டிருந்தது. பாஞ்சாலிசபதத்திற்குப் பாரதி தாமே, உரைநடையில் ஒரு முன்னுரை வரைகிறார். முகவுரைக்கு முன்னதாக இந்நூலைச் சிலருக்குக் காணிக்கையாகவும் வழங்குகின்றார். ஸமர்ப்பணம் என்ற தலைப்பில் அது அச்சிடப்பட்டுள்ளது.

> ''தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப்போகிறவரகவிகளுக்கும், அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப்போகிற பிரபுக்களுக்கும் இந்நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்துகின்றேன்''.

---

**பாரதியாரின் இந்த ஐயப்பாட்டில் அர்த்தம் இல்லாமல் இல்லை; நூலாசிரியனைத் தங்கள் புலமையால் மறைத்துவிட்டுத் தமிழ் இலக்கண இலக்கியங்கள் பலவற்றின் உண்மை அழகினை நாம் தரிசிக்க இயலாது செய்த உரையாசிரியர்கள் பலர். அவர்கள் புலமை பெரிது. ஆனால் மூல நூலை மறைத்து அங்கே தங்களை நிறுத்திக் கொண்ட குற்றம் பல உரைகாரர்களுக்கும் பொருந்தும்.**

---

பாரதிக்குப் பிறகுத் தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் ஊட்டவல்ல வரகவிகள் பிறந்தார்களா? அப்படிப்பிறந்தாலும், பிரபுக்கள் அவர்களை ஆதரித்தார்களா என்கின்ற கேள்விகள் கேட்கப்பட வேண்டியன. அது ஒரு தனி ஆய்வு.

பாரதி மறைவுக்குப் பிறகு அவரது இளைய சகோதரர் திரு.சி. விசுவநாத ஐயர் பாரதி நூல்களை பதிப்பிக்கப் ''பாரதி பிரசுராலயம்'' ஒன்றை நிறுவினார். 1924 இல் பாஞ்சாலி சபதம் முழுவதும் பாரதி மறைவுக்குப்பின் பாரதி பிரசுராலயத்தாரால்



www.saivamonline.com

வெளியிடப்பெற்றது. பாஞ்சாலி சபதம் ஒரு பிரார்த்தனை என்ற தலைப்பில் அதில் ஒரு முன்னுரை வெளிவந்திருக்கிறது.

''வரகவிகளுக்கும் பிரபுக்களுக்கும் பாரதி இந்த நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்தியிருக்கிறார். பாரதியாருக்குப் பின்பு இன்னும் வரகவிகள் தமிழ் நாட்டில் யாரும் தோன்றவில்லையா, தோன்றியிருந்தால் பாரதியின் நூல்கள், இன்னும் இந்த கதியில் அதிக காலம் கதியில்லாமலிருக்காது என்று எண்ணுகின்றோம். எங்கு பார்த்தாலும் மேல் நாட்டின் வழியாக விளம்பரமும், வியாபாரமும், தோன்றுகிறதே ஒழிய உண்மையான விழிப்பு இன்னும் தமிழ்நாட்டில் காணோம்; எவனுக்குத் தாய் பாஷையில் உண்மையான அன்பு ஏற்படவில்லையோ, அவனிடமிருந்து தேச கைங்கரியம் எதிர்பார்ப்பது வீணே; சகோதர சகோதரிகளே

---

**இளங்கோவடிகள் எந்த உணர்வுகளையும் நேரடியாக வெளிப்படுத்தாமல், எந்தப் பாத்திரத்தையும் தான் விமர்சனம் செய்யாது படிப்பவர்களை விமர்சிக்கச் செய்யும் கட்டுப்பாட்டு உணர்வினர். அறநூலாகிய வள்ளுவத்தில், கவிஞன் இடைபுகவே வாய்ப்பில்லை. கம்பர் பல நேரங்களில் உணர்ச்சி வயப்பட்டு உணர்வுகளைக் கொட்டுவார். பாரதியைப் பொறுத்த வரை, பாரதி வேறு, வெடிக்கும் உணர்வுகள் வேறு என்பதில்லை. எதையும் மறைத்துப் பழக்கப்படாத மனம் கவிதையிலும் அதை வெடித்துச் சிதறவிடுகிறது.**

---

சீக்கிரம் விழியுங்கள்; தாய் பாஷையைக் கவனியுங்கள்; அதன் முன்னேற்றத்திற்கு வேண்டிய வழியைத் தேடுங்கள்'' என்று நடையிடும் இப்பதிப்பின் முன்னுரை, செந்தமிழ்த் தேவிக்கு ஒரு பிரார்த்தனை என்ற தலைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.



www.saivamonline.com

> ''செந்தமிழ்த் தேவியே; பாரதியார் எதிர்பார்த்த வரகவிகளும், பிரபுக்களும் தோன்றியிருந்தால் அவர்களுக்கு மெய்ஞ்ஞானம் புகட்டி, அவர்கள் கடமையைக்கற்பி; இன்னும் அவர்கள் தோன்றியிருக்கா விட்டால் காலதாமதமின்றித் தோற்றுவிப்பாயாக''

இந்த அரிய முன்னுரை பாரதி காலத்திலும் அவருக்குப்பின்னும் கூட நமது தமிழ்நாட்டில் தமிழ் எழுச்சியோ, நாட்டுப்பற்றோ சிறந்திருக்கவில்லை என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு, மொழி உணர்வு இல்லாதவனுக்கு நாடு பற்றிய உணர்வு வரும் என்று எதிர்பார்த்தல் வீணே; பாரதியின்சமர்ப்பணம் வீணாகிவிடவில்லை. பாரதிக்குப் பிறகு அவரது கவிதா மண்டலத்தில் சிலவர கவிகள் தோன்றவே செய்தார்கள். ஆனால் அவர்களை ஆதரிக்கும் பிரபுக்கள் தோன்றினார்களா என்பது வேறு கேள்வி.

---

**நாட்டு மக்களை உடல் என்றும் மன்னனை உயிர் என்றும் சொன்ன காலம் சங்க காலம். மன்னனை உடம்பாக்கி மக்களை உயிராக உருவகித்த காலம் கம்பர் காலம். பாரதி மேலும் ஒருபடி போகிறார்; அரசன் நாட்டுக்கு உடலும் அல்லன்; உயிரும் அல்லன்; அவன் ஒரு காவலன்; காவல் உரிமை உண்டே தவிர நாட்டை இழக்கும் உரிமை அவனுக்கு ஏது? எனக் கேட்டுப் புது மரபு படைக்கிறார் கவிஞர்.**

---

பெண்விடுதலை நோக்கில் பாஞ்சாலி சபதம் எழுந்தது என்பது உண்மை. என்றாலும் மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் மக்கள் மத்தியில் உருவாகவேண்டும் என்பதே பாரதியின் நோக்கமாக இருந்தது. வேறு எந்த தமது நூலுக்கும் இல்லாமல் பாரதி பாஞ்சாலி சபதத்தின் முதல் பாகத்திற்கு ஒரு முகவுரை வரைகிறார். இந்த முகவுரைபற்றி முன்னரே நினைவு கூர்ந்தோம். பாரதி இங்கே தாம் பாஞ்சாலி சபதத்தைத் தமிழில் பாடியதற்கு ஒரு காரணம் கூறுகின்றார். பாரதிபற்றிய சிந்தனைகளில்,



www.saivamonline.com

அவரைப்பற்றிய மதிப்பீட்டில் இந்த முகவுரைக்குச் சிறப்பான ஒரு இடம் உண்டு. பாரதி தொடங்குகின்றார்.

> '' எளிய பதங்கள் எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திதே செய்து தருவோன், நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்; ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோர்க்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக் குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்.''

---

**பாஞ்சாலி சபதத்தைப் பாரதத் தாய் சபதமாக உருவகித்தார் என்று கொள்ளத் தேவையில்லை. காப்பியம் காப்பிய நலன் கருதியே பாடப் பெற்றது; கவிஞனுக்குப் பல இடம் இங்கே கருத்துச் சொல்லவும் பயன்பட்டது என்பதே பொருத்தமாகத் தெரிகிறது. அஞ்சாமையே வாழ்வாகக் கொண்ட கவிஞன் ஒரு பழங்கதைக்குள் மறைந்து நின்று விடுதலைப் போரை ஊக்கினான் என்பது அவனுக்குப் பெருமை தருவதாகுமா என்பதைச் சிந்தித்தல் நல்லது.**

---

பாரதியாரின் நோக்கில், அவர்காலச் சூழலில் எளிய மக்களும் படித்துப் பொருளறியத்தக்க காப்பியம் ஒன்று படைத்தல் மெல்ல நசித்துக் கொண்டிருந்த தமிழ்த் தாய்க்கு மீண்டும் உயிரூட்டும் முயற்சியாக இருந்ததை அறிகிறோம். மேலும் பாரதி முகவுரை தொடர்கிறது.

> ''காரியம் மிகப்பெரிது; எனது திறமை சிறிது; ஆகையால் இதனை எழுதி வெளியிடுகின்றேன்; பிறர்க்கு ஆதர்சமாக அன்று; வழிகாட்டியாக''.



www.saivamonline.com

எளிய நடைக் காப்பியம் என்ற வகையில் பாஞ்சாலி சபதத்தில் பாரதியின் ஆசை வெற்றிபெற்றேயிருக்கிறது; மிகப்பெரிய காரியத்தை அவர் சாதித்தேயிருக்கிறார். பாரதியார்,

> ''எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத்தழுவியது; பெரும்பான்மையாக இந்நூலை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதிவிடலாம். அதாவது கற்பனை திருஷ்டாந்தங்களில் எனது சொந்தச் சரக்கு அதிகமில்லை. தமிழ்நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி''

என்று தெளிவுபடுத்துகின்றார். வில்லியை மாற்றியமைக்கப் பாரதியார் முயலவில்லை. வில்லி,

---

**புதுமைப் பெண்ணுக்குப் பிராதிகாமியின் உணர்வுகள் இருக்கக் கூடாது என்பது யார் கூறுவது; பாரதி இந்த வாதத்தைப் பிராதிகாமியிடமிருந்து மாற்றிப் பாஞ்சாலியே செய்ததாகக் களம் அமைக்கிறார். விஸ்வரூபமெடுத்துப் பெண்மை சீறிச் சிலிர்ப்பதைப் பாஞ்சாலி சபதத்திலே படித்து வியக்கிறோம்.**

---

> ''முன் சொலாகிய சொல்லெம் முழுதுணர் முனிவன்
> தன் சொலாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
> தென் சொலால் உரை செய்தேன்''

என வியாசரைத் தமிழ்ப் படுத்ததாகக் கூறுதல் போலவே பாரதியும் வியாசரையே முதல் நூலாகக் கொண்டதாகக் கூறுகிறார். கூறினும் வில்லியின் பாதிப்புப் பாரதியிடம் நிறைவாக அமைந்திருக்கிறது.

> ''தமிழ் ஜாதிக்குப் புதியவாழ்வு தரவேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாள் ஆதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகின்றேன்; ஓம் வந்தே மாதரம்''

என்று முகவுரையை அமரகவி நிறைத்திருக்கிறார்;



www.saivamonline.com

எல்லாரும் படித்தறியத் தக்க எளிய நடைநூல் பாஞ்சாலி சபதம்; என்றாலும் இதிலேயும் எளிதிலே சில நுட்பங்கள் நம்மவர்க்கு விளங்காது என்று கருதி, பாரதியார் தமது பாஞ்சாலி சபத முதற்பாகத்திற்கு ஒரு விளக்கமும் வரைந்திருக்கிறார். பிற்காலப் பாரதி பதிப்புக்களில் ''பொருள் விளக்கமும் குறிப்புக்களும்'' என்ற இப்பகுதி இடம் பெறவில்லை. பாரதியார் பாஞ்சாலி சபதத்தின் பல நுட்பமான பகுதிகளுக்குத் தானே எழுதியிருக்கும் இவ்விளக்கவுரைப்பகுதி அரிய பல கருத்துக்களைச் சுட்டிச்செல்கிறது. குறிப்பாக, பாஞ்சாலி சபதப் பாடல்களுக்கு இன்னது ''மெட்டு'' என்று விளக்குகின்றார்.

---

**செவ்வானப் பேரழகை இத்தனை உணர்ச்சியோடு பாரதிக்கு முன்னோ பின்னோ எவ்ரும் பாடியதாக நினைவு கூர நமது நெஞ்சு மறுக்கிறது. இயற்கையைத் தனியே அர்ச்சுனனை விட்டு ரசிக்க வைக்காது பாஞ்சாலியை அருகிருத்திப் பாடச் செய்த நுட்பம் கவிஞர்க்கே உரியது.**

---

உதாரணமாக அவர் எழுவது; முதற்பாட்டிலிருந்து 18 ஆம் பாட்டு வரையில் நொண்டிச் சிந்து,

லாலல லாலல லா லல
லாலல லாலல லால லலா

என்ற மெட்டில் நடப்பது என்று குறிக்கின்றார்.

லாலல லாலல லா லல
கற்பனைத் தேனித ழாள் சுவை
லாலல லாலல லால லலா
காவிய மெனுமணிக் கொங்கையினாள்:

நயமான உரைப் பகுதிகள் பல, ''வேதத் திருவிழியாள். அதில் மிக்க பல் உரையெனும் கருமை இட்டாள்'' எனவரும் தமது



www.saivamonline.com

சரஸ்வதி வணக்கப்பாடலுக்கு அவர் தீட்டும் உரை நயப்பாடு மிக்கது. ''வேதமாகிய கண்ணில் பலவித வியாக்கியானங்கள் பாஷ்யங்கள் எனும் கரியமையைப் பூசியவள் என்று கூறிய கவிஞர், உரை என்ற பெயரில் இல்லாததை எல்லாம் இருக்கிறது என்று காட்டும் உரைகாரர்களைக் கேலி செய்கிறார்.

> ''மை கண்ணுக்கு நல்லது; அழகுங்கூட; ஆனால், அளவுக்கு மிஞ்சிப் பூசினால்விகாரமாகத் தோன்றுவதுடன் கண்ணே போனாலும் போய்விடும்; நமது தேசத்தில் ஒரு வேளை இப்படி நடந்திருக்குமோ?''

---

**''இன்று, கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்'' என்ற தொடர் அரசியல் வட்டாரங்களிலும் ஆதரவோடு பேசப்பட்டு வருகிறது. ஆழ்ந்த பொருட் சிறப்பு மிக்கது. திரௌபதி கூற்றாக வரும்,**

**''பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்'' என்ற அரியதொடர் பாஞ்சாலி சபதத்திலேயே மறக்க இயலாத ஒன்று.**

---

பாரதியாரின் இந்த ஐயப்பாட்டில் அர்த்தம் இல்லாமல் இல்லை; நூலாசிரியனைத் தங்கள் புலமையால் மறைத்துவிட்டுத் தமிழ் இலக்கண இலக்கியங்கள் பலவற்றின் உண்மை அழகினை நாம் தரிசிக்க இயலாது செய்த உரையாசிரியர்கள் பலர். அவர்கள் புலமை பெரிது. ஆனால் மூல நூலை மறைத்து அங்கே தங்களை நிறுத்திக்கொண்ட குற்றம் பல உரைகாரர்களுக்கும் பொருந்தும். ''ஒருவேளை நமது தேசத்தில் இப்படி நடந்திருக்குமோ?'' என்ற பாரதியின் உரைக் குறிப்பு ஆழமான சிந்தனைகளைத் தோற்றுவிக்கிறது.

சகுனியின் பொய் வழக்கைச் சாத்திரம் எனக் கருதித் தருமன் சூதாடத் துணிந்த செய்தியைப் பாரதியார் வேதனையோடு பாடும் இடம் உண்டு.



www.saivamonline.com

''பொய் ஒழுக்கை அறமெனக் கொண்டும்
பொய்யர் கேலியைச் சாத்திரமென்றும்
ஐயகோ; நங்கள் பாரத நாட்டில்
அறிவிலார்; அறப்பற்றுமிக் குள்ளார்
நொய்ய ராகி அழிந்தவர் கோடி
நூல் வகை பல தேர்ந்து தெளிந்தோன்
மெய்யறிந்தவர் தம்முள் உயர்ந்தோன்
விதியினால் அத்தருமனும் வீழ்ந்தான்;

இப்பகுதிக்கு அவர் வரைந்த உரைகள் ஆவேசமானவை.

---

**புதிய கற்பனைக் கதை ஒன்றையோ மக்களுக்கு முன்னரே அறிமுகம் இல்லாத பழங்கதை ஒன்றையோ பாரதி தம் காப்பியப் பொருளாகத் தேர்ந்தெடுக்காது பாரதக் கதையின்பகுதி ஒன்றைத் தேர்ந்து கொண்டதிலேயே அவர் பெருவெற்றி பெறுகிறார். காரணம் கதை கூற வேண்டிய வேலை குறைகிறது. அறிந்த சம்பவங்களுக்கு உணர்வூட்டி, கூற வேண்டும் என நினைத்தவற்றைக் கூறிச் செல்ல முன்னரே அறிமுகமான கதை பேருதவியாகிறது.**

---

''இப்பாட்டுக்களிலே'' இப் ''பூர்வாசாரங்களில்'' ஆராய்ச்சி இல்லாது பக்தி செலுத்துவோரின் கடமை காட்டப்படுகின்றது; பழமையிலே பெரும்பகுதி உயர்வு சான்றதுதான்; அதிலும் பாரத தேசத்தினரகிய நம்மவரின் நடைகள் அறிவும் அறனும் பொருந்தியனவாகும்; ஆயினும், இழிந்த அமானுஷ்ய நடைகள் சில இவற்றோடு கலந்துள்ளன'' என்று நமது முன்னோர் வகுத்த நெறிகளைப் பாராட்டும் அமரகவி, பிடிவாதமான பழமைப் பித்தர்களைச் சாடவும் தவறவில்லை;



www.saivamonline.com

> "எனது தந்தை க்ஷயநோயால் இறந்து போனான்; எனக்கும் க்ஷயரோகம் வந்திருக்கிறது; எங்கள் பாட்டனுக்கும் இந்த நோயுண்டு. ஆதலால் இந்த நோய் தீர்ப்பதற்கு நான் மருந்து தின்னமாட்டேன்; என்று ஒரு மனிதன் சொல்லுவானானால் அவன் எவ்வளவு பெரிய மூடன்; லோக க்ஷேமத்துக்கும், லோகாபிவிருத்திக்கும் இந்த "மாமூல்" பக்தி எத்தனை பெரிய இடையூறு என்பதை நம்மவர் இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை".

இவ்வாறு எழுதும் பாரதியின் அரிய உரைக்குறிப்புக்கள் பல. இனிவரும் பாரதி பாடல் பதிப்புக்களிலாவது இவரது இந்தக் குறிப்புரைப் பகுதியையும் இணைத்துப் பதிப்பிக்கச் செய்ய நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும். நடை எளிமை வேண்டும் என்பது பாரதியின் நோக்கே தவிரக் கருத்தில் உயர்வே அவரது எண்ணம் என்பதை இத்தகு உரைப்பகுதிகள் நன்கு விளக்குகின்றன.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திற்கு அப்போது வெளிவந்து கொண்டிருந்த "ஞானபானு" இதழில் ஒரு மதிப்புரை வெளிவந்திருக்கிறது; 1913 நவம்பர், இதழில் வெளிவந்த அந்த மதிப்புரை தேசபக்தர் திரு. சுப்பிரமணிய சிவா அவர்களால் எழுதப்பட்டது. பாஞ்சாலி சபதத்தின் கதைபற்றியும் நடை பற்றியும் சிவா கூறுவன பேரழகானவை. அவர் எழுதுகிறார்.

இது மிக அழகிய வர்ணனைகள் நிறைந்த ஒரு காவியம்; பிரம்மஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியார் அவர்களால் இயற்றப் பெற்றது.

ஆர்ய தர்மங்கள் நிறைந்த ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தில் பொறாமையே உருவாகவந்த துரியோதனன், தனது தாய் மாமனாகிய குணகேடன் சகுனியைக் கொண்டு பஞ்ச பாண்டவர்களில் மூத்தோனாகிய தர்ம புத்திரருடன் அவருடைய ராஜ்யத்தையெல்லாம் பிடிங்கிக் கொண்டு அவரையும், அவரது சகோதரர்களையும், அவர்களது தர்ம பத்தினியாகிய திரௌபதியையும் ஓட்டாண்டிகளாக்கிக் காட்டுக்குத் துரத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் சூதாடும்படிச் செய்கிக்கின்ற



www.saivamonline.com

பாகத்தை பிரம்மஸ்ரீ பாரதியவர்கள் செய்யுளில் எழுதியுள்ளார். பாரதியவர்களின் தமிழ் நடையைப் பற்றியும், செய்யுள் விசேஷத்தைப் பற்றியும், தமிழ் நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என நம்புகிறோம்; பாஷாபிமானிகளும், தேசாபிமானிகளும் அவசியம் படிக்கவேண்டிய புஸ்தகம் இது.

பாஷாபிமானிகளுக்கு எழுதியிருப்பதாகப் பாரதி கூறினாலும், சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு, இது தேசாபிமானிகளுக்கும் உரியது என்ற எண்ணம் ஏற்படுகிறது; இந்த எண்ணத்தைச் சற்றே விரிவாக ஆராய்வது பாஞ்சாலி சபதத்தைப் பொறுத்தவரை இன்றியமையாதது. இந்திய விடுதலை வேட்கையை உந்தும் வகையில் இந்நூல் ஒரு மறைமுகமான போர் வாள் என்று கருதப்பட்டது. இன்றும் கருதப்படுகிறது. இதன் உண்மையைச் சீர்தூக்கிப்பார்ப்பது இங்கே வேண்டப்படுகிறது.

காப்பியங்களை நெடுங்கதைகளை நடத்திச்செல்வதில் கவிஞர்கள் பல்வேறு யுத்திகளைக் கையாளுதல் மரபு. ஆசிரியரே கதை செல்வது ஒருவகை. ஆசிரியர் தன்னைக்காட்டிக் கொள்ளாமல் பாத்திரங்களை உரையாட வைப்பதன் மூலம் கதை நடத்துவது இன்னோர் வகை. பாத்திரங்களைப் பேசவிட்டு ஆசிரியர் இடையிடையே இணைப்புரை கூறுவது பிறிதோர் வகை. இம்மூவகையும் தமிழில் உண்டு. தங்கள் உணர்ச்சிகளை எல்லாம் கதைப் பாத்திரங்கள் வழியே வெளியிடுதல் என்பது ஒருதலை சிறந்த யுத்தி. ஆனால், பெரும்பாலான நேரங்களில் கவிஞர்கள் தங்களையும் மறந்து, கதையை இடைமறித்துத் தங்கள் உணர்வுகளைக் கொட்டித் தீர்த்துவிடுவதும் உண்டு. இளங்கோவடிகள் எந்த உணர்வுகளையும் நேரடியாக வெளிப்படுத்தாமல், எந்தப் பாத்திரத்தையும் தான் விமர்சனம் செய்யாது படிப்பவர்களை விமர்சிக்கச் செய்யும் கட்டுப்பாட்டு உணர்வினர். அறநூலாகிய வள்ளுவத்தில் கவிஞன் இடைபுகவே வாய்ப்பில்லை. கம்பர் பல நேரங்களில் உணர்ச்சி வயப்பட்டு உணர்வுகளைக் கொட்டுவார். பாரதியைப் பொறுத்த வரை, பாரதிவேறு வெடிக்கும் உணர்வுகள்வேறு என்பதில்லை. எதையும் மறைத்துப் பழக்கப்படாத மனம், கவிதையிலும் அதை வெடித்துச் சிதறவிடுகிறது. படைப்பாளனே விமரிசகனாக மாறிவிடும் விந்தையைப் பாரதியின் படைப்புக்களில் பலவாகக் காணலாம்.



www.saivamonline.com

வில்லியின் காலம் அரசியல் சமநிலை இல்லாத காலம். ஆனால் அது அவரைப் பாதிக்கவில்லை. அவருக்கு இலக்கியத்தைத்தவிர வேறு சமூகத்தாக்கங்கள் இல்லை. வெளியுலக நிகழ்வுகள் அவரை அதிகம் சிதைக்கவில்லை. அதனால், உணர்ச்சிக் கூறுகளே வில்லியில் இல்லை என்பதில்லை. நிறைவாக இருக்கிறது. ஆனால், அவை ஆவேசமாக வெளிக்கிளம்பாது முறையான வெளிப்பாடாகவே அமைகின்றன. பாஞ்சாலியைத் துச்சாதனன் மக்கள்காண வீதியிலே கூந்தல் பற்றி ஈர்த்துவருகின்றான். திரௌபதி நிலை கண்ட மக்கள், பலவாறாக வருந்தி மொழிகின்றார்கள்; வில்லி, ஊரவர் அவலமுற்றுமொழிவனவற்றை ஐந்து பாடல்களில் புனைகின்றார்;

> இரும்போ நெஞ்சம்? மாமன் இதற்கு இசைந்தான் ஒக்க இருந்தென்பார்;
> பெரும்போர் அரசர் பெண்ணுடனே பிறந்தும் சீறப்பெறார் என்பார்;
> பொரும்போர் வீமன் பொறுத்தாலும் பொன்தேர் விசயன் பொறான் என்பார்;
> அரும்போர் அரசர் ''தகாது'' என்றால் வருமோ இந்த அழிவென்பார்;

இவ்வாறு பாஞ்சாலிக்காக ஏங்கி ஊரார் மொழிவனவற்றை வியாச முனிவரும் குறித்துள்ளார். இந்தப் பகுதியில் பாரதியின் ஆவேசம் புது உருவம் கொள்கிறது.

> ''கக்கக்க என்று கனைத்தே பெருமூடன்
> பக்கத்தே வந்துஅப் பாஞ்சாலி கூந்தலினை
> கையினால் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்;
> ஐயகோ; என்றே அலறி யுணர்வற்றுப்
> பாண்டவர்தம் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
> நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
> முன்னிழுத்துச்சென்றான்; வழிநெடுக மொய்த்தவராய்
> என்ன கொடுமையிது என்று பார்த்திருந்தார்''.

இவ்வாறு, நடைமுறை அறிமுகத்தை முடித்துக் கதை சொல்லும் பாரதி, ஊரவர்தம் இரங்கல் மொழிகளைத் தொகுக்கவில்லை; இதுபாரதி வில்லியை வெற்றிகொள்ளும் இடம்; கவிஞன்



www.saivamonline.com

படைக்கவந்ததைமறக்கிறான்; உள்ளத்துள்ளே பாரதக்கதை மட்டுமில்லை; பாரதநாடே விஸ்வரூபம் கொள்கிறது; ஆங்கிலேயர் கொடுமையும் நம்மவர்கள் சிலர் அக்கொடுமைக்கு ஆட்பட்டுச் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதும் பாரதி நெஞ்சில் விரிகிறது; அஞ்சி அஞ்சிச்சாகும் பாரத மக்களில் அறியாமை கோபமாக வெடிக்கிறது; ''ஐயோ; பாவம்'' என்ற இரங்கல் மொழிகளை அடியோடு வெறுக்கிறது கவிஞன் மனம்; மாபாரதத்துக்குள் கவிஞனின் நிகழ்காலப் பாரதம் புகுகிறது. கவிதை புதுவடிவம் கொள்கிறது;

''என்ன கொடுமையிது; என்றே பார்த்திருந்தார்
ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ;
வீரமிலா நாய்கள்; விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே
பொன்னை அவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?''

பெண்மையை உயர்த்த வந்த கவிஞர் ஆவேசத்தில் பெண்களின் புலம்பலைப் ''பெட்டைப் புலம்பல்'' என நகையாடியும் விடுகிறார். இவ்வாறான உணர்ச்சிக் கூறுகளைப் பாஞ்சாலி சபதத்தில் பல இடங்களில் நாம் காணமுடிகிறது.

தங்கள் நாட்டினையே பணயப் பொருளாக வைத்துத் தருமன் சூதாடித் தோற்கிறான்; கதைப் போக்கில் அது ஒரு நிகழ்ச்சி. வில்லி இந்த நிகழ்ச்சியில் துவங்கவே இல்லை. வில்லிக்குத் தருமன் தன்னாடு இழந்தது மட்டுமே காட்சிக்கு வருகிறது. பாரதிக்குத் தருமன் நாடு வைத்து இழந்த இடத்தைப் பாடுகிற போது, பாரதத்தின் பழங்கதையும் உடன் நெஞ்சில் பூக்கிறது; வணிகத்தின் பொருட்டுவந்த ஆங்கிலேயர்களிடம் இந்திய நாட்டுச் சிற்றரசர்கள் தங்கள் நாடுகளை அரசியல் சூதில் பகடைப்பொருள்களாக வைத்திழந்த கொடுமையில் அவர் நெஞ்சு கொதிக்கிறது. தருமன் நாடு வைத்திழந்த செய்தியைப்பாடும் போது பாரதிக்குப் புதிய வினா ஒன்று கேட்கத் தோன்றுகின்றது. தர்க்கவாதம் புரிகிறார் கவிஞர்.



www.saivamonline.com

''கோயிற் பூசை செய்வோர் சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் வீட்டை
வைத்திழத்தல் போலும்
ஆயிரங்க ளான நீதி
அவையுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்;

நாட்டு மக்களை உடல் என்றும் மன்னனை உயிர் என்றும் சொன்ன காலம் சங்க காலம். மன்னனை உடம்பாக்கி மக்களை உயிராக உருவகித்த காலம் கம்பர் காலம். பாரதி மேலும் ஒருபடி போகிறார்; அரசன் நாட்டுக்கு உடலும் அல்லன்; உயிரும் அல்லன்; அவன் ஒரு காவலன்; காவல் உரிமை உண்டே தவிர, நாட்டை இழக்கும் உரிமை அவனுக்கு ஏது? .எனக் கேட்டுப் புதுமரபு படைக்கிறார் கவிஞர்; பாரதக் கதை மறந்து பாரத நாடு நெஞ்சில் விரிகிறது;

''நாட்டு மாந்த ரெல்லாம் நம்போல்
நரர்கள் என்று கருதார்
ஆட்டு மந்தை யாமென் றுலகை
அரசர் எண்ணி விட்டார்;
காட்டு முண்மை நூல்கள் பலதாம்
காட்டு வார்களேனும்
நாட்டு ராஜநீதி மனிதர்
நன்கு செய்யவில்லை;

மக்களை மக்கள் என்று கருதாது அடிமைப்படுத்திய இந்திய அரசர்களை நொந்து கொண்டு விட்டு மீண்டும் கதையோட்டத்திற்குக் கவிஞர் திரும்புவதைப் பார்க்கின்றோம்.

எனவே பாஞ்சாலி சபதத்தில் மறைந்து கொண்டு பாரதி பாரத நாட்டின் விடுதலையைப் பாடினார் எனப் பலர் பொருத்திக் காட்ட முயல்கின்றனர். அது ஒரு நல்ல கற்பனை தான். பாஞ்சாலியே பாரதத்தாய்; துரியோதனாதியர்கள் வெள்ளையர்கள்; பாண்டவர்கள் இந்திய மன்னவர்கள்; என்றெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து நயங் கூறுவார் ஒன்றை மறந்து விடுகிறார்கள்.



www.saivamonline.com

மேலெழுந்தவாரியாக ஒப்பிட்டு மகிழ இம்முறை சரிபோலத் தோன்றினாலும், இவ்வாறான ஒப்பீட்டில் பல முரண்கள் உண்டாவதை மறுத்தற்கில்லை; எனவே, பாஞ்சாலி சபதத்தைப் பாரதத் தாய் சபதமாக உருவகித்தார் என்று கொள்ளத் தேவையில்லை. காப்பியம் காப்பிய நலங் கருதியே பாடப் பெற்றது; கவிஞனுக்குப் பல இடம் இங்கே கருத்துச் சொல்லப் பயன்பட்டது என்பதே பொருத்தமாகத் தெரிகிறது. அஞ்சாமையே வாழ்வாகக் கொண்ட கவிஞன், ஒரு பழங்கதைக்குள் மறைந்து நின்று விடுதலைப் போரை ஊக்கினான் என்பது அவனுக்குப் பெருமை தருவதாகுமா என்பதைச் சிந்தித்தல் நல்லது. கதை எதுவாயினும், கவிஞன் தன் கருத்துக்களைச் சொல்ல, அதிலே இடம் தேடிக் கொள்வான். இம் முயற்சியிலேயே அவனது கவிதை வெற்றியும் இணைகிறது. எனவே, பாஞ்சாலி சபதம் பாரதி கூறியது போல, எளிய வடிவில் அமைந்த ஒரு காப்பிய முயற்சியே தவிர, திட்டமிட்டுப் பாடப் பெற்ற உருவகக் கவிதை அன்று இந்நிலைக் களத்தில் சிந்திக்க இன்னும் நிறைவான செய்திகள் உண்டு.

நாட்டு விடுதலைக்காகப் போராடும் நாம் நமது இல்லங்களிலே பெண்களை அடிமைப்படுத்துவது நீதியாகாது என்பதே பாரதியின் நோக்கு. முப்பதுகோடி ஜனங்களில் அவர்கள் ஒரு பதினைந்து கோடியல்லவா? எனவே, அவர்களுக்கும் விடுதலை தந்து, அவர்களையும் விடுதலைப் போரில் ஈடுபடுத்தத் துடிக்கிறது கவிஞர் நெஞ்சம். உண்மையிலேயே பெண்மை அடிமைப் பட்டுக்கிடந்த காலம் பாரதி காலம். பாஞ்சாலி சபதத்தையே பெண்மையின் வீரத்தைப் பேசக் களமாகக் கொண்ட பாரதி, தக்க இடம் பார்த்துக் கவிதை நலங்கெடாது தம் கருத்தினை வற்புறுத்துகின்றார். வில்லியின் காலத்தில் பெண் விடுதலை பற்றிய எண்ணங்கள் இல்லை. எனவே, இதுபற்றி வில்லியிலே தேடிப் பார்க்க இடமேயில்லை. சூதாட்டம் சூடுபிடித்து வளர்ந்த நிலை; தங்கள் ஐவரையும் சூதில் இழந்து தருமன் திகைத்திருக்கும் வேளை; வஞ்சகச் சகுனி திரௌபதியையும் வைத்து ஆடத் துண்டுகின்றான்.

''மெய்வரும் திறத்தில் உம்மை வெல்லுமாறு வேறலால்
ஐவரும் திருந்த எங்கள் அடிமையின்னர் ஆயினர்;



www.saivamonline.com

மைவருந் தடங்கண் வேள்வி மாது தன்னை ஒட்டி நீர்;
கைவரும் கவற்றின் இன்னம் எறிக என்று கழறினான்''

தருமனும் அவ்வாறே ஆடத் தொடங்குகின்றான். ஆட்டத்தில் சகுனி வெல்கிறான். ஐவர்க்கும் தேவியாம் பாஞ்சாலியும் அடிமையாகி விடுகிறாள்; இந்நிகழ்ச்சிக்கண்டு அவையோர் வருந்தி மொழிகிறார்கள்; பீஷ்மனும், விதுரனும் துரியனைக் கண்டிக்கிறார்கள். இது வில்லியின் நிலை; பாரதி, பெண் கட்டிய கணவனாலேயே மாற்றானுக்கு அடிமைப்படுத்தப்படுகிறாள் என்ற பழங்கதை கேட்டதும் கொதித்து எழுகிறார்.

பாவியவர் சபைதனிலே புகழ்ப்
பாஞ்சால நாட்டினர் தவப்பயனை
ஆவியி லினியவளை உயிர்த்
தணிசுமந் துலவிடும் செய்யமுதை
ஓவியம் நிகர்த்தவளை அரு
ளொளியினைக், கற்பனைக் குயிரதனைத்
தேவியை, நிலத்திருவை எங்கும்
தேடினுங் கிடைப்பருந் திரவியத்தை
கொடியவர் அவைக்களத்தில் அறக்
கோமகன் வைத்திடல் குறித்துவிட்டான்;

இதனைக் கூறிய கவிஞனுக்கு, இந்த அடாத செயலை ஒருப்பட மனமில்லை; உவமைகளால் இந்தச் செயலைச் சாட நினைக்கிறான்;

வேள்விப் பொருளினையே புலைநாயின் முன்
மென்றிட வைப்பர் போல்
நீள்விட்டப் பொன்மாளிகை கட்டிப் பேயினை
நேர்ந்து குடியேற்றல் போல்
ஆள்விற்றுப் பொன் வாங்கியே செய்த பூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்
கேள்விக் கொருவரில்லை உயிர்த்தேவியைக்
கீழ்மக்கட் களாக்கினான்;

எனப் பேசுகிறார் அமரகவி. ஒவ்வொரு உவமையும் பாரதியே புதிதாகப் படைத்த உவமைகள்; காலகாலமாகப் பேசிவரும் உவமை எல்லைகளைக் கடந்து புதிய உவமைகளை உருவாக்கிச்



www.saivamonline.com

சாடுகிறது கவிதை நெஞ்சம்; வில்லி பேசாத இந்த இடத்தில் பாரதியின் குமுறல் பெண்மைக்குத் தரும் பெருஞ்சிறப்பாகவே அமைகிறது.

திரௌபதியை அரசவைக்கு அழைத்துவரக் கட்டளை இடுகிறான் துரியோதனன்; இந்தச்செய்தி வில்லியிலும் உண்டு. பிராதிகாமி பாஞ்சாலியை அழைக்கச் செல்கிறான். இங்கே பாரதி உணர்ச்சிவெள்ளமாகச் சில வரிகளை எழுதிக் குவிக்கிறார்; ''திரௌபதியைத் துரியோதனன் மன்றுக்கு அழைத்துவரச் சொல்லியது பற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம்'' என்று இப்பகுதிக்குத் தலைப்பிட்டுள்ளர். இங்கே பாரதி எழுதியிருக்கும் வரிகள் வேறு எங்கும் காணவியலாத வேகமும் கோபமும் கொண்டு எழுந்தன.

தருமம் அழிவெய்தச் சத்தியமும் பொய்யாக
பெருமைத் தவங்கள் பெயர்கெட்டு மண்ணாக
வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய
மேலான முனிவர் முறைகெட்டுத் தாம்மயங்க
வேதம் பொருளின்றி வெற்றுரையே யாகிவிட
நாதங் குலைந்து நடுமையின்றிப் பாழாகக்
கந்தருவ ரெல்லாம் களையிழக்கச் சித்தர்முதல்
அந்தரத்து வாழ்வோர் அனைவோரும் பித்துறவே

நாடு நிலை தடுமாறி நானிலமே இந்த அதர்மத்தால் கீழ்மையுற்றது என்கின்றன மேற்கண்ட வரிகள்.

பெண்மையை, வாய்மூடி மௌனியாக நிறுத்தாது, காரணகாரிய அறிவோடு பேச வைத்து மகிழவும் பாரதியாருக்குப் பாஞ்சாலி சபதம் வாய்ப்பளிக்கிறது. மூலக்கதை வழி வில்லி அமைத்த இடம் ஒன்று பாரதிக்கு அறிவார்ந்த உண்மையை விதந்து பேச வாய்ப்பினை நல்குகின்றது. பாஞ்சாலியைப் பகடையாடித் தோற்கிறான் தருமன். அவளைச் சபைக்கு அழைத்து வருக எனக் கட்டளை இடுகிறான் துரியன். அருகில் நின்ற பிராதிகாமி கட்டளையை ஏற்றுப் போகிறான். வில்லி இதனை நீ நனிவிரைவின் ஓடிச் சென்று அவள் இருந்த கோலத் தெரிவையைக் கொணர்தி என்று துரியன் கூற்றாக அமைக்கிறார். அச்சமோ, அன்றி பாஞ்சாலிபால் கொண்ட அன்போ தெரியவில்லை; பிராதிகாமி பாஞ்சாலி இருப்பிடம் போவது போல் பாசாங்குச் செய்துவிட்டுத்



www.saivamonline.com

துரியனிடம் வந்து அவள் கூறியனவாகச் சிலவற்றைப் படைத்து மொழிகின்றான். வாதத்திறமையோடு அவன் பேசும் பேச்சு வில்லியில் அமைகிறது.

''என்னைத் தோற்று மனுநெறிகூர்
இசையோன் தன்னைத் தோற்றானோ;
தன்னைத் தோற்றுத் தனது மனத்
தளர்வால் என்னைத் தோற்றானே''

முன்னரே தன்னைத் தோற்றிருப்பானா அவன் அடிமை. அடிமைக்கு உரிமைப்பொருள் உலகில் இல்லை. அங்ஙனமிருக்கத் தான் தோற்றபின் என்னை வைத்தாடித்தோற்க அவனுக்கு உரிமை இல்லையென பாஞ்சாலி பேசியதாகப் பிராதிகாமி கூறுவதாகப் படைக்கிறார் வில்லி.

மூலக்கதையில் மாற்றமின்றி இதனைப்படைத்த வில்லியைப் பாரதி படித்திருக்க வேண்டும். சட்டங்கள் செய்து பட்டங்கள் ஆளப் பெண்ணைத் தகுதிப்படுத்த நினைக்கும் பாரதிக்குக் கருத்துமிக்க வாதமொன்றைப் பிராதிகாமி செய்ததாகப் படைத்ததை ஏற்க இயலவில்லை. புதுமைப் பெண்ணுக்குப் பிராதிகாமியின் உணர்வுகள் இருக்கக் கூடாது என்று யார்கூறுவது; பாரதி இந்த வாதத்தைப் பிராதிகாமியிடமிருந்து மாற்றிப் பாஞ்சாலியே செய்ததாகக் களம் அமைக்கிறார். விஸ்வரூபமெடுத்துப் பெண்மை சீறிச் சிலிர்ப்பதைப் பாஞ்சாலி சபதத்திலே படித்து வியக்கிறோம்;

எல்லாருங்கூடி இருக்கும் சபைதனிலே
நின்னை அழைத்துவர நேமித்தான் எம்மரசன்;

இது பிராதிகாமி பேச்சு; பாஞ்சாலி சீறுகின்றாள்;

என்ன உரைத்திடலும், யார்சொன்ன வார்த்தையடா;
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா யார்பணியால்
என்னை அழைக்கின்றாய்? என்றாள்; அதற்கு அவனும்
மன்னன் சுயோதனன்தன் வார்த்தையினால் என்றிட்டான்;

அறிவு வாதத்தைப் பாஞ்சாலி தொடங்குகின்றாள்.

''நல்லது நீ சென்று நடந்தகதை கேட்டுவா;
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னை முன்னே கூறி இழந்தாரோ; தம்மையே



www.saivamonline.com

முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரோ?
சென்று சபையில் இச்செய்தி தெரிந்துவா''

பிராதிகாமி போய் இச்செய்தி கூறியதும் சினந்து எழுகிறான் துரியோதனன்; கோபத்தில் அவன், அள்ள இயலாத கீழ்மைகளை வார்த்தைகளாகச் சாய்க்கிறான்;

வேண்டிய கேள்விகள் கேட்கலாம் சொல்ல
வேண்டிய வார்த்தைகள் சொல்லலாம்;
நீண்ட பெருஞ்சபை தன்னிலே அவள்
நேரிடவே வந்த பின்பு தான்; சிறு
கூண்டிற் பறவையும் அல்லளே; ஐவர்
கூட்டு மனைவிக்கு நாணமேன் சின
முண்டு கடுஞ்செயல் செய்யுமுன் அந்த
மொய்குழ லாளை இங் கிட்டுவா;

பிராதிகாமி மீண்டும் பாஞ்சாலியிடம் ஓடி அவன் அழைத்ததாக அழைக்கிறான். வில்லியில் விளங்காத வாதத்தின் உள்ளீட்டைப் பாஞ்சாலி வார்த்தைகளால் பாரதி விளக்குகின்றார்;

நாயகர் தாம்தம்மைத் தோற்றபின் என்னை
நல்கு முரிமையவர்க்கில்லை புலைத்
தாயத்திலே விலைப்பட்டபின் என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்; அவர்
தாயத்திலே விலைப்பட்டவர் புவி
தாங்கும் துருபதன் கன்னிநான்
நிலைசாயப் புலைத்தொண்டுசார்ந்திட்டால் பின்பு
தார முடைமை யவர்க்குண்டோ?

இந்த ஆழமான வரிகளை- வாதங்களைப் பிராதிகாமியிடமிருந்து பாஞ்சாலிக்கு ஆக்கிக்காட்டும் பாரதியின் பெண் பெருமை பேசும் போக்கு அவர் காப்பியம் படைத்த உள்நோக்கில் பெண்மை வாழ்வே தலையாயது என்பதனை நமக்கு இனிது விளக்கி விடுகிறது.

காப்பிய ஆசிரியர்களின் வெற்றி அவர்கள் இயற்கையில் இன்பங்கண்டு நமக்கு எடுத்துக்காட்டும் பேரழகுக் காட்சிகளில் தங்கியிருப்பதைப் பல நேரங்களிலே காணலாம்; வில்லியின் இயற்கைபாடும் ஆற்றல்பெரிது; சூது போர்ச்சருக்கத்தில் அவர் அதனை நிறைவாக எடுத்துக்கொள்ளவில்லை. பாரதத்தை முழுவதுமாகப் பாடிய வில்லிக்கு வேறு இடங்கள் அமைந்தன.



www.saivamonline.com

பாரதியின் நிலை வேறு. சூதுபோர்ச்சருக்கத்தை மொழிபெயர்க்க வந்தவரல்லர் பாரதி. அதனையே ஒருமுழுக் குறுங்காப்பியமாக்க நினைத்தவர். எனவே, ஒன்றிரண்டு வாய்ப்புக்களில் இயற்கையழகினைப்பாடி எக்காளமிட்டு மகிழ்கிறார்; அத்தினாபுரம் நோக்கிப் பாண்டவர் பெரும்படையுடன் வருகின்றனர். இடைவழியில் சூரியன் மறைகிறான்; சந்திரோதயம் மலர்கிறது; இவற்றை ஐந்தே பாடல்களில் - இருபது வரிகளில் வில்லி பாடி முடிக்கிறார்; சூரியன் மறைவதில் வில்லிக்கு இவ்விடத்தே ஒன்றும் கற்பனைஇல்லை.

'வருந்தினர் இவர்; துயில் வதியவேண்டும் என்று இருந்தபனனும் இவர்க்கு இரவு நல்கினான்' என்று பாண்டவர்களுக்கு ஓய்வு நல்க ஆதவன் மறைந்தான் என இரண்டு வரிகளிலே முடித்துக்கொள்கிறார் வில்லி.

பாரதிக்கு இயற்கை பாட இதுவே இடம்; காலைக்கதிரழகின் கற்பனைகளைக் குயிற் பாட்டில் கொட்டிக்கவிழ்த்தவர், மாலைப் பேரழகை மனம் நிறையப்பாடுகின்றார். மாலைப்போதில் பாஞ்சாலியை அழைத்துக்கொண்டு அர்ச்சுனன் போய் ஒரு பொழிலிலே தங்குகின்றான்; மறையும் பரிதியை இருவரும் தொழுகின்றனர். மெல்லியல் தனியிடத்தே அவன் தொடைமேல் சாய்கிறாள்; குயிலைப்போல் மொழி பிதற்றுகின்றாள்; பார்த்தன் பரிதி எழில் விளக்கிப் பேசுகின்றாள்;

பாரடியோ; வானத்தில் புதுமை எல்லாம்;
பண்மொழீ; கணந்தோறும் மாறிமாறி
ஓரடிமற் றோரடியோ டொத்தலின்றி
உவகையுற நவநவமாய்த் தோன்றுங்காட்சி;
யாரடியிங் கிவைபோலப் புவியின் மீதே
எண்ணரிய பொருள் கொடுத்தும் இயற்ற வல்லார்;

என்று உலக ஓவியர்காளலே தீட்ட முடியாத செவ்வானப் பேரழகைப் பார்த்தனுக்குள் புகுந்து கொண்டு கவிஞர் வியக்கிறார். சக்தி தாசரான பாரதியாருக்கு இந்தப் பரிதி, இதன் சுழற்சி, இதுவிளைக்கும் வண்ணக்காட்சிகள் யாவுமே சக்தியின் வெளிப்பாடாகவே தோன்றுகின்றன;

அடிவானத் தேயங்கு பரிதிக் கோளம்
அளப் பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்;
இடிவானத் தொளிமின்னல் பத்துக்கோடி



www.saivamonline.com

எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக்காளி யாங்கே
மொய்குழலாய், சுற்றுவதன் மொய்ம்பு காணாய்
வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்;

சூரியன் மறைந்துவிட்டதும் எழுந்த செவ்வானக் காட்சியிலே கவிஞன் கொண்ட ஈடுபாட்டை நமது சொற்களாலே சொன்னால் நிறையாது; பாஞ்சாலிக்குக் காட்டிப்பார்த்தன் பேசுகிறான். பாரதியின் இயற்கை ரசனை உணர்ச்சிக் கொப்பளிப்போடு பொங்கிவழிகிறது.

பார்; சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனைத் தீப்பட் டெரிவன; ஓகோ,
என்னடி; இந்த வண்ணத் தியல்புகள்;
எத்தனை வடிவம்; எத்தனை கலவை;
தீயின் குழம்புகள், செம்பொன் காய்ச்சி
விட்ட வோடைகள், வெம்மை தோன்றாமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்; பாரடி
நீலப் பொய்கைகள்; அடடா நீல
வன்ன மொன்றில் எத்தனை வகையடீ;
எத்தனை செம்மை, பசுமையும் கருமையும்
எத்தனை கரிய பெரும்பெரும் பூதம்
நீலப் பொய்கையின் மிதந்திடும் தங்கத்
தோணிகள்; சுடரொளிப் பொற்கரையிட்ட
கருஞ்சிகரங்கள் காணடீ ஆங்கு
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்; ஆஹா எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள், ஒளித்திரள், வண்ணக் களஞ்சியம்.

செவ்வானப் பேரழகை இத்தனை உணர்ச்சியோடு பாரதிக்கு முன்னோ பின்னோ எவரும் பாடியதாக நினைவு கூர நமது நெஞ்சு மறுக்கிறது. இயற்கையைத் தனியே அர்ச்சுனனை விட்டு ரசிக்க வைக்காது, பாஞ்சாலியை அருகிருத்திப் பாடச் செய்த நுட்பம் கவிஞர்க்கே உரியது. கதிரழகு பாடியதோடு பாரதி நின்று விடுகிறார். நிலாத்தோற்றத்தை வில்லி படைக்கிறார். வில்லியின் கற்பனை நிலாத் தோற்றத்தில் பெருஞ்சிறப்பாக அமைகிறது. தேன்குடித்து மயங்கிய வண்டுகள் சுற்றித்திரியும் சோலை ஒன்றில்



www.saivamonline.com

மரங்கள் மண்ணில் இருளை மிகைப்படுத்தி நிற்கின்றன; மரங்களின் அடர்த்தியால் நிலவின் கீற்றுக்கள் மரங்களின் இடைஇடையே புகுந்து தரையில் கோலமிட்டன. நிழலும் நிலவும் கலந்து கிடந்த நிலக்காட்சி எப்படி இருந்தது? வில்லி அழகான உவமை காட்டுகின்றார். அருள்கொண்டதம் காதலர்களோடு கூடிய மகளிரின் விரிந்த கூந்தலோடு கட்டித்தொங்கி நிற்கும் வெள்ளை நிறப்பூக்கள் போன்றன என்கிறார். கருங்கூந்தல் இடையே வெண்மலர் நிறைந்திருப்பது போல், இருளிடையே நிலவொளி கோலம் காட்டுவதாகக் கவிஞர் கற்பனை விரிகிறது.

''மருள்மிகு அரும்பினம் மணந்த சோலையின்
இருள்களின் இடையிடை எறிந்த வெண்ணிலா
அருளுடை மைந்தர் தோள் அணைந்த மங்கையர்
புரிகுழல் நெகிழ்ந்தவெண் போது போலுமே''

அருளுடைமைந்தர் தோள் என அடைகொடுத்து உவமிக்கும் வில்லியின் கற்பனை மிக்க நயமானது. பாரதி அந்திவான அழகே போதுமென்பார்போல் நிலா எழுச்சியைப் பாடாது விடுகிறார்.

சந்தங்களிலே வில்லியும் பாரதியும் போட்டி போட்டு முந்தும் இடங்கள் பலவுண்டு. விருத்தப்பாக்களை விட்டு இறங்காத வில்லி; சிந்திலே நடைபோடும் பாரதி, இருவர் நடையும் தனித்தனியே சந்தக் கொழிப்புக்களுக்கு இடம் தருவன. ஒத்த தன்மையுடைய பாட்டுக்கள் இல்லாமையின் முறையாகச் சந்தச் சிறப்பினை ஒப்பிடக்கூடவில்லை. அத்தினாபுரி புறப்பட்ட பாண்டவரின் யானைகளைக் கூற வந்த வில்லி பாடலில் சந்தம் கொழிக்கிறது.

மைத்திறத்தின் நின்றதிர்வன முதிர்வன வரைத்திறத்தினும் ஓங்கும்
மெய்த் திறந்தன எழுதிறத்தினும் மிக விடுவன மததாரை
எத்திறத்தினும் பொருதொழில் புரிவன ஏழ் உறுப்புறத் தாழ்ந்த
முத்திறத்தன எண்ணலப் பிறப்பின மூரிவெங்களியானை.

பாரதியின் பாஞ்சாலி சபதமே சந்தக் குவியல் நிறைந்த பூக்காடு; நொண்டிச் சிந்து அளவொத்த ஓசையோடு துள்ளு நடையிடுவது. பாரதியின் நோக்கே இந்த நடை நலத்தில் காப்பியம் படைப்பதுதான். எத்தனையோ சந்தப் பாட்டுக்கள் பாரதியிடம் உண்டு.



www.saivamonline.com

''தந்தத்தில் கட்டில்களும் நல்ல
தந்தத்தில் பல்லக்கும் வாகனமும்
தந்தத்தின் பிடிவாளும் அந்தத்
தந்தத்தி லேசிறப்புத் தொழில் வகையும்
தந்தத்தி லாதனமும் இவையனைத்தும்
தந்தத்தைக் கணக்கிடவோ முழுத்
தரணியில் திருவுமித் தருமனுக்கோ''

என்ற பாடலில், எட்டில் ஆறு வரிகளில் தந்தமென்ற சந்தத் சொல்லேற்றி ஓசையட்டும் பாரதியைப் பாஞ்சாலி சபதத்திலே காண்கிறோம்.

கருத்து விளக்கங்களுக்கு உவமைகளை எடுத்து ஆள்வது கவி மரபு. பழைய புளித்துப் போன உவமைகளைத் தூற எறிந்துவிட்டுப் பாரதி படைத்துக் கொண்ட உவமைகள் மிகப்பல. நினைத்துப் போற்றத்தக்க புதிய உவமை வடிவங்களில் வில்லியும் சிறந்து நிற்கிறார். விதியின் கொடுமையால் எதுவும் நிகழும் என்பதனைக் கூற வந்த அமரகவி நடவாத உலகியல் பலவற்றை வரிசைப்படுத்துகின்றார். யாவுமே புதிய சிந்தனைகளாக அமைகின்றன.

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும்; சிற்றெறும்பால் யானை சாகும்;
வரிவகுத்த வுடற்புலியைப் புழுவுங் கொல்லும்;
வருங்காலம் உணர்வோரும் மயங்கி நிற்பார்
கிரி, வகுத்த வோடையிலே மிதந்து செல்லும்
கீழ்மேலாம், மேல்கீழாம் கிழக்கு மேற்காம்
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவார் விதிவகுத்த போதில் நன்றே

பாரதியில் நினைவு கூர்ந்து போற்றத்தக்க வரிகள் மிகப் பலவுண்டு. வீமன் கூற்றாக.

இது பொறுப்பதில்லை தம்பி
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான்; அண்ணன்
கையை எரித்திடுவோம்''

என்ற ஆவேசப் பேச்சை நினைவு கூராதார் இல்லை. வீமன் கூற்றுக்கு மறுமொழி கூறும் அர்ச்சுனன் பேச்சில் வரும்,



www.saivamonline.com

''இன்று, கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்'' என்ற தொடர் அரசியல் வட்டாரங்களிலும் ஆதரவோடு பேசப்பட்டு வருகிறது. ஆழ்ந்த பொருட் சிறப்பு மிக்கது. திரௌபதி கூற்றாக வரும்.

''பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்'' என்ற அரியதொடர், பாஞ்சாலி சபதத்திலேயே மறக்க இயலாத ஒன்று.

தனிக் காப்பியமாக இரண்டு பகுதியில் ஐந்து சருக்கங்கள் அமைக்கும் பாரதி முதற்பாகத்திலும் இரண்டாம் பாகத்திலும் கடவுள் வாழ்த்து அமைக்கிறார். வில்லியின் சூது போர்ச்சருக்கம் ஒரு காப்பியத்தின் அங்கமேயாதலின் இங்கே கடவுள் வாழ்த்துப்பற்றிப் பேச்சில்லை, முதற்பாகத்தில் பிரம்ம வணக்கம்பாடி, கலைமகளைப் போற்றுகின்றார் அமரகவி.

இரண்டாம் பாகத்தில் பராசக்திக்கு ஒன்றும் கலைமகளுக்கு ஒன்றுமாக இரண்டு பாடல்கள் உள்ளன. பராசக்தி வணக்கம் மிகவும் சிறப்பானது. மலையிலிருந்து கொண்டுவரப்பட்டது ஒரு கல். இரண்டாக பிளந்தான் சிற்பி. ஒன்றைக் கோயில் படிகளிலே அமைத்தான். மற்றொன்றினைச் சிற்பமாகச் செய்து கோயில் கருவறையில் தெய்வமாக மாற்றிவணங்கச் செய்தான். பராசக்தி, நீயோ உலகின் தாய்; எவரையும் எவ்விடத்தும் எவ்வாறும் மாற்றும் வல்லமை உனக்கியல்பாகுமே; உன் திருவடிகளைப் போற்றி நின்றேன். என்னைக் கலைதெரிபுலவனாக உயர்த்தியருள்க என்பது பாடலின் பொருளமைதி. பாரதியின் பராசக்தி வணக்கம் நுட்பமுற விரிகிறது.

ஆங்கொரு கல்லை வாயிலிற் படியென்
றமைத்தனன் சிற்பி மற்றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்தினான்; உலகினோர் தாய் நீ
யாங்ஙனே, எவரை, எங்ஙனம் சமைத்தற்
கெண்ணமோ? அங்ஙனம் சமைப்பாய்;
ஈங்குனைச் சரணென் றெய்தினேன் என்னை
இருங்கலைப் புலவனாக் குதியே;

பெண்மையின் ஆவேசத்தையும் வீரசபதத்தையும் வில்லியும் புனைந்தார்; பாரதியும் புனைந்தார். இதில் பாரதியின்வேகமும் சீற்றமும் பெரிது. தன் கூந்தலைக்கைத்தொட்டு ஈர்த்துத் தன்னை அவை நடுவே ஆடை களைந்திட முயன்ற துச்சாதனனையும்,



www.saivamonline.com

தன்தொடையில் வந்து அமருமாறு நகையாடிக் கூறிய துரியோதனனையும் போரில் மாய்த்து அவர்கள் குருதியை நெய்யாக என் குழல் மீது தடவியன்றி இதனை முடிக்க மாட்டேன் என்று பாஞ்சாலி சபதம் இடும்பகுதி இரண்டு நூல்களிலும் உண்டு. வில்லியின் பாஞ்சாலி, சபதம் உரைக்கிறாள்;

அரசவையில் எனைஏற்றி, அஞ்சாமல் துகில்தீண்டி அளகம் தீண்டி
விரைசெய் அளி இனம் படிதார் வேந்தர் எதிர் தகாதனவே விளம்புவோரைப்
பொருசமரில் முடிதுணித்து, புலால்நாறு வெங்குறுதி பொழிய வெற்றி
முரசறையும் பொழுதல்லால், விரித்த குழல் இனிஎடுத்து முடியேன் என்றாள்.

வில்லியில், பாஞ்சாலி சபதம் உரைத்த பிறகே வீமனும் அருச்சுனனும், நகுல சகாதேவர்களும் வஞ்சினம் உரைத்ததாகப் படால்கள் வருகின்றன. பாரதி முதலிலே பீமனைச் சபதம் செய்யவைக்கிறார். அடுத்து அர்ச்சுனன் சபதம் அமைகிறது. இறுதியாகவே பாஞ்சாலி சபதம் அமைகிறது. வில்லியைப் போல் ஓரே பாடலிலே பாஞ்சாலியின் சபதமொழி பாரதியிலும் நிறைகிறது. ஆயினும் பாஞ்சாலியின் சீற்றமும் சினமும் பாரதியில் பளிச்செனத் தெரிகிறது.

தேவி திரௌபதி சொல்வாள் ஓம்
தேவி பராசக்தி ஆணை உரைத்தேன்;
பாவி துச்சாதனன் செந்நீர் அந்தப்
பாழ்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து குழல்
மீதினில் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான் இது
செய்யுமுன் னேமுடி யேனென் றுரைத்தாள்

வில்லியின் பாஞ்சாலி, வெற்றி முரசின் ஓசை கேட்டபின் குழல் முடிப்பேன் என்கிறாள். பாரதியின் பாஞ்சாலியோ, எந்த இரத்தவெறி பெண்மையைக்களங்கப்படுத்தியதோ அந்தக் குருதிகளை எடுத்துக் குழைத்து என்கூந்தலில் தடவி நெய்யாடியல்லது குழல் முடியேன் எனச் சபதமிடுகிறாள்.



www.saivamonline.com

## விடை தேடும் வினாக்கள்

பாஞ்சாலி சபத மொழிக்குப் பின்வரும் வில்லி சூதுபோர்ச் சருக்கத்தை நீட்டுகின்றார். பாரதிக்கு உணர்வோடும் ஆவேசத்தோடும் கதையை நிறைவு செய்யவே விருப்பம். இறுதியில் ஒரே ஒரு வாழ்த்தினைக்கூறி பாரதி நூலையே நிறைவு செய்து விடுகிறார். பாஞ்சாலியின் சபதத்திற்கு வானத்துத் தேவர்களும் உடன்பட்டு நல்லாசி கூறகிறார்களாம். இயற்கையும் இதற்குத் துணையாகி நிற்கிறதாம்.

ஓம் என் றுரைத்தனர் தேவர் ஓம்
ஓமென்றுசொல்லி உறுமிற்று வானம்;
பூமியதிர்ச்சி யுண்டாச்சு; விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று;
சாமி தருமன் புவிக்கே என்று
சாட்சி யுரைத்தன பூதங்கள் ஐந்தும்
நாமும் கதையை முடித்தோம்; இந்த
நானில முற்றுநல் லின்பத்தில் வாழ்க.

பாஞ்சாலி சபதம் நிறைவு பெறுகிறது. புதிய கற்பனைக் கதை ஒன்றையோ, மக்களுக்கு முன்னரே அறிமுகம்இல்லாத பழங்கதை ஒன்றையோ பாரதி தம் காப்பியப் பொருளாகத் தேர்ந்தெடுக்காது பாரதக் கதையின்பகுதி ஒன்றைத் தேர்ந்து கொண்டதிலேயே அவர் பெருவெற்றி பெறுகிறார். காரணம் கதை கூற வேண்டிய நிலை குறைகிறது. அறிந்த சம்பவங்களுக்கு உணர்வூட்டி, கூற வேண்டும் என நினைத்தவற்றைக் கூறிச் செல்ல, முன்னரே அறிமுகமான கதை பேருதவியாகிறது.

வில்லியின் முத்திரைகள் அவர்கால எல்லையோடு ஒட்டி ஆராயும்போது ஆழமானவைகளே. பாரதியின் விடுதலை வேட்கைக்கும் தமிழ் வளர்ச்சி நோக்கிற்கும் பெண்மைக்குப் பேரிடம் தரவேண்டும் என்ற உள்ளார்ந்த உணர்வுக்கும் பாஞ்சாலிசபதம் துணைநின்றது. எளிய பதம் எளிய நடை எளிய சந்தம் எல்லாரும் விரும்பும்மெட்டு, இவையெல்லாம் காப்பிய வெற்றிக்குத் தூண்களாக நின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக எதனையும் உணர்வோடு வெளிப்படுத்தும் பாரதியின் கவிதை நெஞ்சம் பாஞ்சாலிக்குப் புத்துயிர் ஊட்டிற்று. பாரதத்தின் பெருமையும் பழந்தமிழின் பெருமையும் பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் கால காலங்களுக்கு நின்று நிலவும். பாஞ்சாலி சபதத்தில் பாரதியும் உயிர்ப்போடு வாழ்ந்திருப்பார்.

www.saivamonline.com